1978 மார்ச் 10]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பதில ளித்த அமைச்சர் இது ஆஸ்திகர்களின் உள்ளத்தைப் புண்படுத்து கிறது என்று குறிப்பிட்டது போன்ற உணர்வை உருவாக்குவது போன்ற வகையில் பதில் சொன்னார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்கிற அத்தனை பேரும் தங் களுக்கென்று கொள்கைகளை வைத்துக் கொள்கிற உரிமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆஸ்திகர்களுக்கு எந்த அளவுக்கு உரிமை உண்டோ அந்த உரிமை நாஸ்திகர்களுக்கும் உண்டு.

அதுமட்டுமல்ல; மதச் சார்பற்ற சர்க்கார் என்று நாம் பெரு மையோடு பேசிக் கொள்கிறோம். அப்படிப் பேசிக் கொள்ளுகிற மத்திய அரசு ஆஸ்திகர்களின் படங்களைத் தபால் தலையில் போட்டுவிட்டு நாஸ்திகர் என்ற முத்திரை பொறித்து தேசியப் போராட்டத்தில் முன்னணித் தளநாயகனாக இருந்த பெரியார் அவர்களின் உருவப் படத்தைத் தபால் தலையில் போட மறுப்பது அல்லது அனுமதி வழங்கிய பிறகு அது மறு பரிசீலனையில் இருக் கிறது என்று தெரிவிப்பது தமிழக மக்களின் உள்ளத்தைப் புண் படுத்துவதாகும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, மக்களின் உணர்வுகளை, இந்த அவையின் உணர் வுகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி ஏற்கனவே எடுத்துக் கொண்ட முடிவில் மாற்றம் வரக்கூடாது என்பதை இந்த அரசு வற்புறுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வினாவிடை நேரம் முடிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்னை குறித்து.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்துவிட்டது என்று தாங்கள் கூறியவுடன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து பேசினார்கள். அவர்கள் எந்த விதியின் கீழ் எழுந்து பேசினார்கள்? அது பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனா? அல்லது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா? எதிலே கிளப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேசியதற்குப் பிறகு அதைப் பற்றிய விளக்கம் கேட்பது சரியல்ல.

திரு. துரை முத்துசாமி: அவர் பேசியது பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா? எது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற வகையில் என்னுடைய அனுமதிப் பெற்றுப் பேசினார். இது சபையில் தினசரி நடைபெறுகின்ற ஒன்றுதான்.

(3) அறிவிப்பு

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1977-ம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டம் 44-வது திருத்தச் சட்ட முன்வடிவுக்கு ஏற்பளிக்கும் தீர்மானம் 13—3—78-ம் தேதியன்று வினாக்கள்-விடைகளுக்குப் பின்பும் அன்றைய தினம் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டிய மானியக் கோரிக்கைகளுக்கு முன்பும் எடுத்துக் கொள்ளப்பெறும். தேவையிருப்பின், பேரவை அன்று மாலையிலும் கூடும்.

திரு. மு. அம்பிகாபதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மானியக் கோரிக்கை எண். 28-சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் . . .

ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தபின், அது சபையில் எடுத்துக் கொள்வதற்கு முன் ஒழுங்கு பிரச்னை எழுப்புவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிக்குப் போய் விட்டேன். மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்துவிட்ட பிறகு என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. மு. அம்பிகாபதி: இடையிலே பேச எழுந்தேன். எனக்கு மைக் கூட வேண்டாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லாமல் பேசக் கூடாது. ஒரு நிமிஷத்தில் நான் எல்லாவற்றையும் நீக்கிவிட முடியும்.